கொ.மு.சுட்டெண்
2020 யூன்

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி

## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

முக்கிய விடயங்கள்:


நடமாட்டத்திற்கான கட்டுப்பாடுகளை முழுமையாகத் தளர்த்தியதனைத் தொடர்ந்து நாட்டில் பொருளாதார நடவடிக்கைகளின் இயல்புநிலையிலிருந்து நன்மையடைந்து தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணானது 2020 மேயுடன் ஒப்பிடுகையில் 18.0 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட மாதத்திற்கு மாத அதிகரிப்புடன் 67.3 இனைப் பதிவுசெய்து 2020 யூனில் கணிசமாக அதிகரித்தது.

**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**67.3**

2020 மேயுடன் ஒப்பிடுகையில் 18.0 சுட்டெண் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பு

தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணின் இவ்வதிகரிப்பானது விசேடமாக, உள்நாட்டு கேள்வி மூலம் பிரதானமாக துணையளிக்கப்பட்டு முன்னைய மாதத்தினைவிட அதிகமான புதிய கட்டளைகளைப் பெற்று யூன் மாதம் முழுவதும் தமது தொழிற்சாலைகள் முழுமையாக தொழிற்பட்டன என்பதனை பல பதிலிறுப்பாளர்கள் எடுத்துக்காட்டியிருந்த உணவு மற்றும் குடிபானங்கள் அத்துடன் புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் துணை வகைகளின் தயாரித்தலின் உற்பத்தி, புதிய கட்டளைகள் மற்றும் தொழில்நிலையின் குறிப்பிடத்தக்க மேம்பாட்டின் மூலம் துணையளிக்கப்பட்டிருந்தது. மாதகாலப்பகுதியின் போது புதிய கட்டளைகளின் வளர்ச்சியுடன் இணைந்து உற்பத்தி மற்றும் கொள்வனவுகள் இருப்பு என்பனவும் உயர்வான வீதத்தில் அதிகரித்தன.

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

அதிகரித்த தயாரிப்பு நடவடிக்கைகள் மூலம் தொழில்நிலை துணைச் சுட்டெண், 50 - அடிப்படை அளவினைத் தாண்டி அதிகரித்தது. கொவிட்-19 நோய்தொற்றானது உலகளாவிய விநியோகத்தினை மோசமாகப் பாதித்தமையினால் காலப்பகுதியின் போது நிரம்பலர் விநியோக நேரம் மெதுவான வேகத்திற்கு மத்தியிலும் தொடர்ந்தும் நீட்சியடைந்தது.

| மாறி | மே | யூன் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **49.3** | **67.3** | **+** | **வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய கட்டளைகள் | 47.3 | 73.7 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு |
| உற்பத்தி | 51.1 | 77.4 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| தொழில்நிலை | 37.8 | 51.6 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு |
| கொள்வனவுகளின் இருப்பு | 47.9 | 61.1 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு |
| நிரம்பலாளர்களின் விநியோகிக்கும் நேரம் | 66.5 | 63.2 | - | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்த மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளில் ஒட்டுமொத்த எதிர்பார்ப்பானது முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்த போதிலும் தயாரிப்பாளர்கள், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று காரணமாக மந்தமடைந்த வெளிநாட்டுக் கேள்வி தமது வியாபார நடவடிக்கைகள் மீது தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கும் என்ற கரிசனையை இன்னும் கொண்டிருக்கின்றனர்.

### *உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சு 2020 மேயிலிருந்து 5.4 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்புடன் 2020 யூனில் 47.8 இனைக் கொண்ட பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தது.

கொவிட் - 19இன் மோசமான தாக்கத்தின் மூலம் 2020 யூனில் சீனா, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் தயாரிப்பு கொ.மு.சு விரிவடைந்த அதேவேளை ஐரோப்பிய வலயம், ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் சுருக்கமடைந்து காணப்பட்டது.

*மூலம்: மார்க்கிட்[1], யூலை 15, 2020 இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை*


**பணிகள் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், தொடர்ச்சியாக மூன்று மாதங்களாக 50.0 அடிப்படை மட்டத்தினைவிடக் குறைந்த சுட்டெண் பெறுமதிகளைப் பதிவுசெய்த பின்னர் 50.4 இனை அடைந்து 2020 யூனில் வளர்ச்சி எல்லைக்குத் திரும்பியது.** புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கைகள், தொழில்நிலை மற்றும் நடவடிக்கைத் துணைச் சுட்டெண்களுக்கான எதிர்பார்க்கைகள் என்பனவற்றில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களினால் இது துணையளிக்கப்பட்டிருந்தது.

**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**50.4**

2020 மேயுடன் ஒப்பிடுகையில் 7.3 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு

பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக இயல்புநிலைக்குத் திரும்பியதன் மூலம் புதிய வியாபாரங்கள், குறிப்பாக நிதியியல் பணிகள், காப்புறுதி மற்றும் மொத்த மற்றும் சில்லறை வர்த்தக துணைத் துறைகள் 2020 யூனில் மேம்பட்டன.

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

வியாபார நடவடிக்கைகளும் பணி நடவடிக்கைகளில் விரிவாக்கமொன்றினை எடுத்துக்காட்டி மாதகாலப்பகுதியில் விரிவடைந்தன. உள்நாட்டு பயணக் கட்டுப்பாடுகள் முழுமையாகத் தளர்த்தப்பட்டதன் மூலம் போக்குவரத்துத் துணைத் துறையின் வியாபார நடவடிக்கைகள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 யூனில் மேம்பட்டன. மேலும், மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், நிதியியல் பணிகள் அத்துடன் ஏனைய தனிப்பட்ட பணிகள் என்பனவற்றுடன் தொடர்புடைய வியாபார நடவடிக்கைகளும் மாதகாலப்பகுதியில் அதிகரித்தன. எவ்வாறாயினும், பதிலிறுப்பாளர்கள் குறிப்பாக போக்குவரத்து மற்றும் தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம் துணைத் துறையினைச் சார்ந்தவர்கள், பன்னாட்டு வர்த்தகத்தின் சீர்குலைவினதும் தமது வியாபார நடவடிக்கைகள் மீது நிலவுகின்ற பன்னாட்டு பயணக் கட்டுப்பாடுகளினதும் சாத்தியமான சீர்குலைவுத் தாக்கம் பற்றி கரிசனைகளைத் தெரிவித்தனர்.

எனினும், புதிய ஆட்சேர்ப்புகள் நிறுத்தப்பட்டதன் காரணமாக முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 யூனில் தொழில்நிலை தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது.

மேலும், 2020 யூனில் நிலுவையிலுள்ள பணிகள் வீழ்ச்சியடைந்து கேள்வியில் ஏற்படுகின்ற ஏதேனும் அதிகரிப்பு பணி வழங்குநர்களின் ஏற்கனவேயுள்ள இயலளவுடன் நிறைவேற்றப்படக்கூடியதாகவிருக்கும் என்பதனை சுட்டிக்காட்டுகின்றது.

| மாறி | மே | யூன் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **43.1** | **50.4** | **+** | **அதிகரிக்கின்றது, வீழ்ச்சியிலிருந்து** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 45.7 | 53.6 | + | அதிகரிக்கின்றது, வீழ்ச்சியிலிருந்து |
| வியாபார நடவடிக்கை | 34.2 | 54.5 | + | அதிகரிக்கின்றது, வீழ்ச்சியிலிருந்து |
| தொழில்நிலை | 27.7 | 34.7 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 61.0 | 48.4 | - | வீழ்ச்சியடைகின்றது, அதிகரிப்பிலிருந்து |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 46.7 | 60.7 | + | அதிகரிக்கின்றது, வீழ்ச்சியிலிருந்து |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அதேவேளை, எதிர்கால வியாபார நடவடிக்கைகள் மீதான எதிர்பார்க்கைகள், எதிர்வரும் மாதங்களில் பொருளாதார நடவடிக்கைகளின் மேலும் மீட்சியினைக் குறித்துக்காட்டி 2020 யூனில் அதிகரித்தன.

***உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

உலகளாவிய பணிகள் கொ.மு.சு 2020 மேயில் 35.1 இலிருந்து அதிகரிப்பொன்றுடன் 2020 யூனில் 48.0 இனை பதிவுசெய்து, தொடர்ச்சியாக ஐந்து மாதங்களாக உலகளாவிய பணி நடவடிக்கைகளில் சுருக்கத்தினை சமிஞ்சைப்படுத்துகின்றது.

ஐக்கிய அமெரிக்கா, யப்பான், ஐக்கிய இராச்சியம் மற்றும் இந்தியா என்பனவற்றின் பணிகள் கொ.மு.சு முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 யூனில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் சீர்குலைந்திருந்தமையினை எடுத்துக்காட்டிய அதேவேளை சீனா ஒரு மேம்பாட்டினைக் குறித்துக்காட்டியது.

*(மூலம்: மார்க்கிட்[1], யூலை 15, 2020 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

தொழில்நிலை : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை
கொள்வனவுகளின் இருப்பு : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள்
நிரம்பலர் வழங்கல் நேரம் : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு
நிலுவையிலுள்ள பணிகள் : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள்

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.